Paper ID: IC13

# இலங்கை சிறுபான்மை முஸ்லிம்கள் எதிர்நோக்கும் இன நெருக்கடிகள் - மாயக்கல்லி புத்தர் சிலை வைப்பு விவகார விஷேட ஆய்வு

**K.L. Fathima Nafla[1], A.F.Mifra[2]**

[1]Department of Social Science, Faculty of Arts & Culture, South Eastern University of Sri Lanka[1]
[2]Department of Political Science, Faculty of Arts & Culture, South Eastern University of Sri Lanka[2]
naflikl1992@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

இலங்கை ஒரு பல் கலாசார சமுதாய அமைப்பினைக் கொண்ட நாடு. இது சிங்களவர்களைப் பெரும்பான்மையாகவும் தமிழர்கள், முஸ்லிம்கள், பறங்கியர்கள் போன்றவர்களை சிறுபான்மையினராகவும் கொண்டமைந்துள்ளது. இலங்கையில் சிறுபான்மையினருக்கு எதிரான பெரும்பான்மையினரின் நெருக்கீடு நீண்ட வரலாற்றைக் கொண்டது. இன முரண்பாடு தோற்றுவித்த யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு சில வருடங்களே கடந்த நிலையில் இலங்கை சிறுபான்மை முஸ்லிம்களை குறிவைத்து பெரும்பான்மை இனத்தவர்களால் தொடக்கிவிடப்பட்டிருக்கும் நெருக்கடிகள் ஏற்படுத்தியிருக்கும் அசாதாரண சூழ்நிலை கவனம் கொள்ளப்பட வேண்டியது. அதன் ஒரு பகுதியாக தமிழர்களும் முஸ்லிம்களும் வசிக்கின்ற, இறக்காமம் பிரதேச செயலகப் பிரிவுக்குள் அடங்கும் மாணிக்கமடு பிரதேசத்தில் மாயக்கல்லி மலை மேல் அத்துமீறி வைக்கப்பட்டிருக்கும் புத்தர் சிலை மற்றும் அதனைத்தொடர்ந்து முஸ்லிம்களின் காணியில் விகாரை அமைப்பதற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் ஆக்கிரமிப்பு தொடர்பில் எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்பதில் கவனம் செலுத்துவதாக இவ்வாய்வு அமைகின்றது. மேலும் இலங்கை முஸ்லிம் சிறுபான்மைக்கு எதிரான நெருக்கடிகள், அதற்கான காரணங்கள், அதனைத் தீர்ப்பதற்கான வழிமுறைகள் என்பன பற்றியும் ஆராய்கின்றது. இது விபரிப்புப் பகுப்பாய்வு முறையில் அமைந்த பண்பு ரீதியான ஆய்வாகும். இதற்கான தகவல்கள் புத்தகங்கள், ஆய்வுக் கட்டுரைகள், இணையத்தளக் குறிப்புக்கள், பத்திரிகைக் கட்டுரைகள் போன்றவற்றிலிருந்து பெறப்பட்டவையாகும்.

**திறவுச்சொற்கள்** : மாயக்கல்லி புத்தர் சிலை, முஸ்லிம் சிறுபான்மையினர், இன முரண்பாடு

## அறிமுகம்

இலங்கை இன, மத, மொழி ரீதியாக பன்மைத்தன்மையைக் கொண்ட நாடாகும். பௌத்த மதத்தைப் பின்பற்றும் சிங்களவர்கள் பெரும்பான்மையினராகவும் முறையே இந்து, இஸ்லாம் மதங்களைப் பின்பற்றும் தமிழர் மற்றும் முஸ்லிம் மக்கள் பிரதான சிறுபான்மையினர்களாகவும் இருக்கின்றனர். ஏனைய சிறுபான்மையினர்கள் பொதுவாக சிங்களவர்களாகவும் தமிழர்களாகவும் காணப்படுகின்றனர்.

2012 சனத்தொகை கணிப்பீட்டின் படி இலங்கையில் மொத்த சனத்தொகை 20.2 மில்லியன் ஆகும். அதில் 70.2 வீதமானோர் பௌத்தர்களாகவும், 12.6 வீதமானோர் இந்துக்களாகவும், 9.7 வீதமானோர் முஸ்லிம்களாகவும், 7.4 வீதமானோர் பறங்கியர்களாகவும் காணப்படுகின்றனர். (ஆலிப் , 2015)

இலங்கையின் சிறுபான்மை இனத்தவர்கள் மீது பெரும்பான்மை ஆதிக்கவாதிகள் மேற்கொண்டு வரும் நெருக்கடி முன்னெடுப்புக்கள் முப்பது வருடங்களாக தொடர்ந்த பாரிய யுத்தத்திற்கு வழிவகுத்ததை யாரும் மறந்து விட முடியாது. அது தமிழர்கள் மீதான நெருக்கடியாகவும், அதன்வழியாக உருவான தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்குமான மோதலாகவும் அமைந்திருந்தது. இவ்

யுத்தம் 2009 மே 18இல் மஹிந்த ராஜபக்ஸவினை ஜனாதிபதியாகக் கொண்ட அரசாங்கத்தினால் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. இதன்போது ஏற்பட்ட இழப்புக்களும், நாடு சந்தித்த பின்னடைவும் வரலாற்றில் ஒரு கறுப்புப் புள்ளியாகவே உள்ளது. இது நீண்ட வரலாற்றுப் பின்புலத்தைக் கொண்டதாகும்.

முஸ்லிம்கள் மீதான நெருக்கடியின் ஆரம்ப விதை 1915 இல் இடம்பெற்ற சிங்கள – முஸ்லிம் கலவரத்தினூடாக இடப்பட்டது என்கிறது வரலாறு. அதன் பின்னர் ஏற்பட்ட பல்வேறு முரண்பாடுகளைத் தொடர்ந்து யுத்தம் முடிவுற்ற பின்னர் இதற்கெல்லாம் முற்றுப்புள்ளி இடப்பட்டு விட்டது என்றே மக்கள் எண்ணினர்.

ஆனால் யுத்தத்திற்கு பின்னரான இலங்கையில் சிறுபான்மை இனத்தவர்கள் மீதான நெருக்கடிகள் தொடர்ந்த ஒரு பதட்ட நிலையிலேயே அவர்களை தக்க வைத்திருக்கும் போக்கை காணக்கூடியதாக உள்ளது. குறிப்பாக மதத்தலங்கள் மீதான தாக்குதல்கள், முஸ்லிம் சிறுபான்மையினருக்கு எதிரான பிரச்சாரங்கள், முஸ்லிம்களின் சொத்துக்கள் மீதான தாக்குதல்கள், முஸ்லிம் பிரதேசங்களில் அத்துமீறிய ஆக்கிரமிப்புக்கள் போன்றன அதற்கு சான்று பகர்கின்றன.

இத்தகைய செயற்பாடுகளின் ஒரு முயற்சியாகவே அம்பாரை மாவட்டத்தின் இறக்காமம் பிரதேச செயலகப் பிரிவிற்கு உட்பட்ட மாணிக்கமடு கிராமத்தின் மாயக்கல்லி மலையில் அத்துமீறி வைக்கப்பட்டுள்ள புத்தர் சிலையைக் குறிப்பிடலாம்.

2016 ஒக்டோபர் 20 ஆம் திகதி திடீரென அப்பகுதிக்குள் பிரவேசித்த பௌத்த பிக்குகள் ஐந்தடி உயரமுள்ள புத்தர் சிலையினை மாயக்கல்லி மலையில் வைத்து விட்டுச் சென்றனர். மாணிக்கமடு கிராமத்தில் 101 தமிழ்க்குடும்பங்கள் வசிக்கின்றன. இதற்கருகே பல முஸ்லிம் கிராமங்கள் உள்ளன. மாணிக்கமடுவில் இருந்து நான்கைந்து மீற்றர்கள் தொலைவில் தீகபாவி விகாரையும் அதனைச்சூழ புனித பூமியும் உள்ளது. ஆயினும் மாணிக்கமடுவில் ஒரு சிங்களக் குடும்பமேனும் நிரந்தரமாக வசிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (வீரகேசரி, 2017.04.30)

இதன் பின்னரான சர்ச்சைகளைத் தொடர்ந்து குறித்த விடயம் ஓய்ந்திருந்த நிலையில் 2017 ஏப்ரல் மாதம் அங்கு வந்த மற்றுமொரு குழுவினர் மலையடிவாரத்தில் முஸ்லிம்கள் இருவருக்குச் சொந்தமான காணிகளில் விகாரை ஒன்றை அமைப்பதற்கான பணிகளில் ஈடுபட்டனர். இது ஒரு முறுகல் நிலையைத் தோற்றுவித்தது. இதன் பின்னணி சக்திகள், இந்த விடயத்தில் பராமுகமாக இருக்கும் ஊடகங்கள், முஸ்லிம் அரசியல் கட்சிகள், அரசாங்கம், நீதித்துறை போன்றவை மீது மக்கள் அதிருப்தி அடைந்திருக்கும் இச்சந்தர்ப்பத்தில் அதற்கான மாற்று நடவடிக்கை தொடர்பில் கவனம் செலுத்த வேண்டிய தேவை எழுந்துள்ளது.

முஸ்லிம் சிறுபான்மையினர் மீது கட்டவிழ்த்து விடப்படும் இச் செயற்பாடுகள் தொடர்பில் விரிவான ஆய்வுக்குட்படுத்துவதோடு அதனை பிரதான பேசுபொருளாக்க வேண்டிய தேவையை முஸ்லிம் புத்திஜீவிகள், ஆய்வு மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்தும் முயற்சியாக இக்கட்டுரை அமைகின்றது.

### யுத்தத்திற்கு பின்னர் முஸ்லிம்கள் மீதான நெருக்கடிகள்

யுத்தத்தை நிறைவுக்கு கொண்டு வந்து அதனை மிகப்பெரும் வெற்றியாக மகிந்த ராஜபக்ஸ அரசாங்கம் அறிவித்தது. அதற்குப் பின்னர் அபிவிருத்திப்பாதையை நோக்கி இலங்கை பயணித்தது. குறிப்பாக மீள்குடியேற்றம், புணர்வாழ்வு, உட்கட்டமைப்பு, மீள் ஒருங்கிணைவு போன்ற சாதகமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் நாட்டில் சமாதானம் மற்றும் நல்லிணக்கச் செயற்பாடுகள் நிலைபேறுடையதாக அமையவில்லை. சிறுபான்மை இனத்தவர்கள் மீதான

நெருக்கடிகள் பல்வேறு விதத்திலும் பல்வேறு தரப்பினரால் மேற்கொள்ளப்பட்டன. இது தொடர்பில் அதிகம் பாதிப்புற்றவர்களாக முஸ்லிம்களைக் குறிப்பிடலாம்.

யுத்தத்திற்கு பின்னரான காலப்பகுதியில் சிங்கள ராவய, பொதுபல சேனா போன்ற அமைப்புக்கள் சிறுபான்மையினரின் இயல்பு வாழ்க்கைக்கு பாதிப்பு ஏற்படும் வகையிலான செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றமை பிரதானமாக குறிப்பிடத்தக்கதாகும். குறிப்பாக முஸ்லிம்கள் மீது அவிழ்த்து விடப்பட்டிருக்கும் வன்முறை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றமை கவலை தரக்கூடியது.

தம்புள்ள பள்ளிவாசல் மீதான தாக்குதல் தொடங்கி நாட்டின் பல பாகங்களிலும் உள்ள பள்ளி வாசல்களின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல், முஸ்லிம் பெண்களின் (ஹிஜாப்) ஆடை மீதான எதிர்ப்புணர்வு, ஹலால் சான்றிதழ் மீதான எதிர்ப்பு வாதங்கள், காளி நீதிமன்றங்கள் மீதான எதிர்க்கருத்துக்கள் போன்றன முஸ்லிம்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைச் சம்பவங்களுக்கு சான்று பகர்கின்றன. இவற்றிற்கெல்லாம் பின்னணியாக நின்று செயற்படும் பௌத்த பேரினவாத இயக்கமான 'பொதுபலசேனா' மஹிந்த அரசின் காலகட்டத்தில் அரசியல் லாபங்களுக்காக உருவாக்கப்பட்டது என்ற குற்றச்சாட்டு பரவலானது.

பௌத்தர்களின் நலன் பேணும் விதமாகவும் அரச விடயங்களில் பௌத்த தத்துவங்களை நடைமுறைப்படுத்தும் நோக்குடனும் செயற்பட்டு வந்த ஜாதிக ஹெல உருமய கட்சியானது முஸ்லிம்களுக்கு எதிரான கருத்துக்களை வெளியிடவும் தயங்கவில்லை. இக்கட்சியின் பின்புலத்தைக்கொண்ட ஞானசார தேரர் மற்றும் கிரம விமல ஜோதி தேரர் என்பவர்களால் 2012 ஜூன் காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டதே பொதுபல சேனா அமைப்பாகும். இலங்கையை சிங்கள பௌத்த தேசமாக மாற்றுவதே இவர்களின் கொள்கையாகும்.

இவர்கள் இலங்கையை பௌத்தத்தை அடிப்படையாகக் கொண்ட நாடாக மாற்ற வேண்டும் என்பதில் முழு மூச்சாக செயல்பட்டனர். பெரும்பான்மை பௌத்த மக்களிடம் இத்தகைய நிலைப்பாட்டை விதைத்ததுடன் நாட்டின் சிறுபான்மையினருக்கு எதிராக செயற்படவும் செய்தனர். இதன் விளைவாகவே முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் தொடக்கி வைக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டும் வந்தன.

இவர்களது இத்தகைய செயற்பாடுகள் இலங்கை சமூகத்தினரிடையே குறிப்பாக முஸ்லிம்களிடையே பலத்த பாதிப்புக்களை ஏற்படுத்தின. மக்களின் வாழ்வாதாரம், பொருளாதாரம் என்பன பாதிக்கப்பட்டதுடன் அவர்களின் உயிர், உடமை, கலாசாரம் போன்றவற்றிற்கான அச்சுறுத்தல்களும் அதிகரித்தன. இத்தகைய நிலைப்பாடுகள் இரு சமூகத்தினர் மத்தியிலும் பிரிவினைகள் தோன்றக் காரணமாக அமைந்தன. (ஆலிப், 2015)

இத்தகைய நிலைப்பாடுகளின் மீது பாராமுகமாக இருந்தமையே மஹிந்த ராஜபக்ஸவினை ஜனாதிபதியாகக் கொண்ட அரசாங்கம் 2015 ஜனவரி 8ஆம் திகதி நடைபெற்ற தேர்தலில் தோல்வியைத்தழுவ காரணமாக அமைந்தது எனலாம். அதனைத்தொடர்ந்து ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி மைத்திரிபால சிரிசேனவும் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவும் நல்லாட்சியை நடைமுறைப்படுத்தப்போவதாக அறிவித்தனர்.

'பள்ளிவாசல்கள் தாக்கப்பட்ட காலம் மலையேறிவிட்டது. இனி இந்த நாட்டில் முஸ்லிம் மக்கள் சுதந்திரமாக தமது மத கலாசார நடவடிக்கைகளைத் தொடரலாம் அதற்கு எமக்கு நல்லாட்சி அரசாங்கம் உத்தரவாதமளிக்கிறது' என இந்த அரசாங்கம் அறிவித்தது. (www.virekesari.lk, 2016)

ஆனால் ஆட்சிமாற்றம் எத்தகைய சூழ்நிலை மாற்றத்தையும் ஏற்படுத்தி விடவில்லை. பள்ளிவாசல்கள் மீதான தாக்குதல்களும் முஸ்லிம் வர்த்தக நிலையங்கள் மீதான தாக்குதல்களும், காணி அபகரிப்புப் பிரச்சினைகளும் முஸ்லிம்கள் மீதான அச்சுறுத்தலாக இன்று வரையில் தொடர்ந்து அரங்கேறிவருவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான 'நல்லாட்சி' அரசாங்கமும் இது தொடர்பில் எவ்வித நடவடிக்கையினையும் மேற்கொள்ளாமல் பாராமுகமாக இருப்பது மக்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

இதன் நீட்சியாகவே கிழக்கில் இறக்காமம் பிரதேச சபைக்கு உட்பட்ட தமிழ் மக்கள் வாழும் பிரதேசத்தை அண்டிய மாயக்கல்லி மலையில் திடீரென தோன்றியுள்ள புத்தர் சிலை மற்றும் விகாரை அமைப்பதற்கான நடவடிக்கையையும் நோக்க வேண்டியுள்ளது. இச்சிலை வைக்கப்பட்டு ஒரு வருடத்தை எட்டியுள்ள நிலையில் அதனை அகற்றவோ, வேறு பகுதிக்கு இடமாற்றவோ எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. அதுமட்டுமன்றி சிங்களவர்கள் அறவே வசிக்காத அவ்விடத்தில் விகாரை அமைப்பதற்கான செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டமை மேலும் பதட்டநிலையைத் தோற்றுவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**மாயக்கல்லி சிலை வைப்பு நடவடிக்கையும் சம்பவங்களும்**

கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்தில் இறக்காமம் பிரதேச செயலகப் பிரிவுக்குள் உள்ளடங்கும் பிரதேசமே மாணிக்கமடுவாகும். இங்கு சுமார் 101 தமிழ்க்குடும்பங்கள் வசிக்கின்றன. இதற்கருகே பல முஸ்லிம் கிராமங்கள் உள்ளன. மாணிக்கமடுவில் இருந்து நான்கைந்து கிலோமீற்றர்கள் தொலைவில் தீகபாவி விகாரையும் அதைச்சூழ புனித பூமியும் உள்ளது. ஆயினும் மாணிக்கமடுவில் நிரந்தரமாக வசிக்கின்ற ஒரு சிங்கள குடும்பமேனும் இல்லை. கடந்த 2016 ஒக்டோபர் 29 ஆம் திகதி மாணிக்கமடு மாயக்கல்லி மலையில் தமிழர்களின் தீபாவளித் தினத்தன்று அங்கு வந்த சில பௌத்த பிக்குகளை உள்ளடக்கிய குழுவினர் 5 அடி உயரமுள்ள புத்தர் சிலையை வைத்து விட்டுச் சென்றனர். இதனால் அந்த பிரதேசத்தில் பாரிய களேபரம் இடம்பெற்றது. இது இன ஒற்றுமையை சீர்குழைக்கும் செயற்பாடாகும். இதுவரை அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படாத நிலையிலேயே நிலமை காணப்படுகின்றது.

இதுபற்றி அப்போதைய மாவட்ட அபிவிருத்திக் கூட்டத்தில் பேசப்பட்ட போதிலும் அதில் பங்கேற்ற அமைச்சர் தயா கமகே சிலையை அகற்றுவதற்கு சம்மதிக்க மாட்டேன் என்ற பாணியில் கருத்து வெளியிட்டிருந்தார். எனவே இதன் பின்னணியில் தயா கமகே இருப்பதாக பரவலாக குற்றம் சாட்டப்படுகின்றது. ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரான அவரது இச்செயற்பாடு அம்பாரை வாழ் முஸ்லிம்களையும் தமிழர்களையும் அதிருப்தியுறச் செய்ததுடன் அக்கட்சியின் சிறுபான்மை ஆதரவாளர்களையும் சங்கடத்தில் ஆழ்த்தியுள்ளது. (www.virekesari.lk, 2016)

இது தொடர்பில் தொடர்ந்து அப்பிரதேசத்தில் ஏற்பட்ட சர்ச்சையினால் தமிழ், முஸ்லிம் மக்களும் ஒரு சில அரசியல் வாதிகளும் அதற்கெதிராக குரலெழுப்பினர். பின்னரான பொலிசாரின் தலையீட்டினால் இவ்விடயம் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. ஆனால் இனவாதிகள் இது சிங்கள நாடு, தொல்பொருள் திணைக்களத்துக்குரிய மலையில் சிலை வைக்க எங்களுக்கு அதிகாரம் உண்டு என்று வாதிட்டனர். ஆனால் தீகபாவிக்குச் செல்லும் பக்தர்கள் தரித்துச் செல்வதற்கான ஒரு இடமாகவே இது இருக்கும், இங்கு பெரிய விகாரை எதுவும் கட்டமாட்டோம் என்று உறுதியாக தெரிவித்தனர். இந்த விடயம் இழுபறியாக காணப்பட்டது. பின்னர் வழக்கம் போல முஸ்லிம் தலைமைகள் இதில் மௌனம் காத்தன. (வீரகேசரி, 201704.30)

அதன் பின்னர் மீண்டும் 2017 ஏப்ரல் மாத காலப்பகுதியில் அங்கு சென்ற மற்றுமொரு குழுவினர் மலையடிவாரத்தில் விகாரை ஒன்றை கட்டுவதற்கான பணிகளில் ஈடுபட்டனர். அங்கு தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்குமே காணிகள் உள்ளன. சிங்களவர்களுக்கு காணி இல்லை. எனினும் முஸ்லிம்கள் இருவருக்கு சொந்தமான காணியினுள் அத்துமீறி பௌத்த விகாரை நிர்மாணிக்க அவர்கள் முனைந்தனர். ஆனால் அக்கிராம மக்கள் அதற்கான சந்தர்ப்பத்தை வழங்கவில்லை. அதனைத்தொடர்ந்து இவ்விடயம் அரச நிர்வாக உயர் மட்டத்தினரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

மாயக்கல்லியில் விகாரை அமைப்பது தொடர்பில் எதிர்ப்பினை வெளியிட்டுள்ள தீகவாபி பரிவார சைத்திய பர்திவெல சந்தவெல தேரர் சிங்கள குடும்பம் ஒன்றேனும் இல்லாத இடத்தில் விகாரை நிர்மாணிக்கத் தேவையில்லை எனக்குறிப்பிட்டுள்ளார். எனினும் அம்பாரை விதியானந்த பிரிவென பிரதானி அம்பே பிட்டிய சீலரத்ன தேரர் இதற்கு மாற்றமான கருத்தினைத் தெரிவித்துள்ளார். விகாரை அமைப்பதற்காக முஸ்லிம்களின் காணியை நாம் அபரிக்க மாட்டோம் என்றும் குறிப்பிட்ட பிரதேசத்தில் விகாரை ஒன்றை மட்டுமே நிர்மாணிப்போம் பௌத்த குடும்பம் ஒன்றையும் குடியேற்ற மாட்டோம் என்றும் அவர் குறிப்பிடுவதுடன், இந்த விகாரை அமைப்பின் மூலம் அவ்விடத்தில் வர்த்தக நிலையங்கள் அமையப்பெறும் எனவே அது முஸ்லிம்களுக்கான வியாபார வாய்ப்பாக அமையும் என்றும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (www.puthithu.com, 2017)

அதுமட்டுமன்றி சிலை வைப்பு விவகாரம் தொடர்பில் எவ்வித கவனமும் செலுத்தாத முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் 2017 ஏப்ரல் மாதம் இறக்காமம் சென்றிருந்தார். இதன்போது பிரதியமைச்சர்கள், கிழக்கு மாகாண முதலமைச்சர், கிழக்கு மாகாணசபை உறுப்பினர்கள் உள்ளிட்ட குழுவும் சென்றிருந்தது. எனினும் பொதுமக்களின் கேள்விகளுக்கு முஸ்லிம் காங்கிரஸின் தலைவரினால் தகுந்த பதிலளிக்க முடியாமல் போனமை மக்கள் ஆவேசமடையக் காரணமாக அமைந்தது. (www.puthithu.com, 2017)

இதற்கிடையில் இனவாதத்தை துரிதகதியில் பரப்பிக்கொண்டிருக்கும் கலகொட அத்தே ஞானசார தேரர் சம்பவ இடத்துக்கு வந்து சென்றிருந்தமையும் இவ்விடயத்தை மற்றுமொரு கண்ணோட்டத்தில் நோக்க வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தியுள்ளதுடன் இது வெறுமனே விகாரை அமைக்கும் நிகழ்வாக மட்டும் இருக்குமா? என்பதில் சந்தேகம் கொள்ள வேண்டியுள்ளது.

### நல்லாட்சியும் நடைமுறையும்

நல்லாட்சி என்பது இன்று அனைவராலும் வேண்டப்படுகின்ற ஒன்றாக காணப்படுகின்றது. நல்லாட்சி என்பதை சில அம்சங்களினூடாக எடுத்துக்காட்ட முடியும். மக்கள் பங்குபற்றல், சட்ட ஒழுங்கு செயற்பாடுகள், வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறுதல், திடமான அபிவிருத்தி, சமத்துவமும் உள்வாங்கலும் போன்ற இன்னோரன்ன பண்புகளைக்கொண்டதாக நல்லாட்சி அமையும் என்பது கோட்பாட்டு ரீதியான விளக்கமாகும். அரசு, சிவில் சமூகம், தனியார் துறை ஆகிய மூன்றும் நல்லாட்சியின் பங்குதாரர்களாக கொள்ளப்படுகின்றனர். (சர்ஜுன்,றிபான் : 83, 2011)

இன்று பல நாடுகளில் நல்லாட்சியின் தேவை நன்கு உணரப்பட்டிருக்கிறது. அதிகமான அளவில் இது பற்றி பேசப்பட்டும் வருகிறது. நல்லாட்சி எனும் போது 'மக்கள் நலன் பேணும் நல்ல அரசு' எனக் கொள்ளலாம். அறிவுடையவர்களும் பொதுநல நோக்குடையவர்களும் ஆள்கின்ற போதே நல்லாட்சி ஏற்படும் என்பது பிளேட்டோவின் கருத்தாக அமைந்தது. இங்கு பொதுநலன் என்பது வேறுபாடுகள் கலைந்த நிலையாகும். சட்டவாக்கத்தின் படி நாட்டின் அனைத்து மக்களும் சட்டத்தின் முன்னால் சமனான கண்ணோட்டத்திலேயே நோக்கப்படுவர் என்பது நல்லாட்சியின் ஒரு பண்பாக

காணப்படுகின்றது. இத்தகைய ரீதியிலான நிலைப்பாடு நடைமுறையாக்கப் படுகின்றதா? என்ற கேள்வியை நாம் தற்கால அரசுகளில் எழுப்புவதன் மூலம் எவ்வாறான விடையினை பெற்றுக்கொள்கிறோம் என்பதைப் பொறுத்து தீர்மானங்களுக்கு வரமுடியுமானதாக இருக்கும்.

இலங்கையைப் பொறுத்தவரை, 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ தோல்வியடையக் காரணமாக அமைந்தது அவரது ஆட்சியில் தலைதூக்கியிருந்த சிறுபான்மை மக்களுக்கெதிரான இனவாத நெருக்கடிகளின் போது எவ்வித எதிர்வினைகளையும் ஆற்றாமல் இருந்தமையேயாகும். அதனை சரிசெய்வதை வாக்குறுதியாக வழங்கிய மைத்திரி, ரணில் கூட்டிணைவு நல்லாட்சியை தங்கள் கோஷமாகக் கொண்டு தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டியது. இதனைத் தொடர்ந்து கடந்த ஆட்சியில் பாதிப்புற்ற சிறுபான்மை மக்களுக்கு உரிய நீதி கிடைக்கும் நாள் உருவாகி விட்டதாக மக்கள் நம்பிக்கை கொண்டிருந்தனர். ஆனால் மாற்றம் எதுவும் நிகழாத ஆட்சி மாற்றம் ஒன்று உருவாகியிருப்பது தொடர்ந்து இடம்பெறும் நிலவரங்களிலிருந்து தெளிவாகிறது.

கடந்த ஆட்சியிலும் சரி 'நல்லாட்சி' என்று பெயர்சூட்டப்பட்ட இந்த ஆட்சியிலும் சரி சிறுபான்மை மக்கள் தொடர்ந்து மத, இன ரீதியாக நெருக்கடிக்கு உள்ளாக்கப்பட்டு வருவது குறைந்தபாடில்லை. அதன் தொடர்ச்சியான நடவடிக்கையாகவே மாணிக்கமடு மாயக்கல்லி மலை விவகாரத்தைக் கொள்ள முடியும். சிறுபான்மை மக்களின் ஆதரவுடன் ஆட்சிக்கு வந்த இந்நல்லாட்சி அரசாங்கம் அவர்கள் மேல் கட்டவிழ்த்து விடப்படும் இனவாத நடவடிக்கை மீது பாராமுகமாக இருப்பதானது வரலாற்றுத் துரோகமன்றி வேறில்லை.

இதற்கு முன்னர் நடைபெற்ற சிறுபான்மையினரின் காணி அபகரிப்பு, சட்டவிரோத குடியேற்றம் என்பன தொடர்பில் நீதியைப் பெற்றுத் தருவார்கள் என்றெண்ணிய நிலையில் மாணிக்கமடு பிரதேசத்தில் சிலை வைத்த போதும் இவ்வரசாங்கம் கண்டுகொள்ளாமல் இருந்தது போல் இப்போது விகாரை அமைக்கும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட நிலையிலும் எவ்வித நடவடிக்கையையும் மேற்கொண்டதாக தெரியவில்லை. முஸ்லிம்களின் காணிகளை அபகரித்து விகாரை அமைக்க முன்வந்திருக்கும் செயல் சிங்கள குடியேற்றங்களை அப்பிரதேசத்தில் அமைப்பதற்கான முயற்சியாக அமையலாம் என அப்பிரதேச தமிழ்,முஸ்லிம் மக்கள் அச்சம் கொள்வது நியாயமானது. இதன் பின்னணியில் நின்று செயற்படும் பௌத்த பேரினவாதிகளையும் தொடர்ந்து பல வகைகளிலும் அவர்கள் முன்னெடுக்கும் வன்முறை, நெருக்கடிகளையும் அப்படியே அதன்போக்கில் விட்டு வைத்திருக்கும் இந்தச் செயல் எத்தகைய ரீதியிலும் நல்லாட்சிக்கு உதாரணம் கூற முடியாதது. இது பெயரளவில் மாத்திரம் 'நல்லாட்சியை' சூடிக்கொண்ட ஒரு அரசாங்கமாக மட்டுமே இருப்பது நாளுக்கு நாள் புலனாகிறது.

### மாயக்கல்லி விவகாரமும் முஸ்லிம் அரசியல் கட்சிகளும்

இலங்கை முஸ்லிம் கட்சி அரசியலும் அதன் பின்னரான மாற்றங்கள், தலைமைத்துவங்கள் காலத்துக்கு காலம் பல்வேறு மாற்றங்களோடும் வளர்ச்சி கண்டும் வந்திருக்கிறது. அது தொடர்பில் ஆய்வு செய்வது இக்கட்டுரையின் நோக்கமல்ல என்பதனால் 2015 தேர்தலின் பின்னரான முஸ்லிம் அரசியல் கட்சியின் நிலைப்பாட்டினையும் மாயக்கல்லி விபரம் தொடர்பில் அக்கட்சிகளின் நிலைப்பாடுகள், நடவடிக்கைகள் தொடர்பிலும் பேசுவது பொருத்தமானது.

இற்றைக்கு அறுபது வருடங்களுக்கு முன்னரே இலங்கை முஸ்லிம் அரசியல் கட்சிகளுக்கான விதை இடப்பட்டிருந்த போதிலும் அவை முஸ்லிம்களின் தனித்துவமாக பார்க்கப்படவில்லை. அதனை ஒரு குறையாகக் கொண்டு 1980களில் மறைந்த அரசியல் தலைவர் எம்.எச்.எம். அஷ்ர.ஃ.ப் இனால்

கிழக்கில் முஸ்லிம்களின் தனித்துவ கட்சியாக முஸ்லிம் காங்கிரஸ் தோற்றுவிக்கப்பட்டது. சமூக அரசியல் சூழ்ச்சிகள் மற்றும் நெருக்கடிகளுக்கு மத்தியில் முஸ்லிம் அரசியலின் போக்கை இது மாற்றியமைத்தது. அஷ்ர∴பின் மரணத்துக்குப் பின்னர் அக்கட்சி துண்டுகளாக்கப்பட்டு கொள்கையற்ற ரீதியில் மாற்றம் பெற்றது. (www.arugamnews.com , 2017) இன்று வரையில் அக்கட்சியின் தலைவராக ரவூப் ஹக்கீம் கொள்ளப்படுகின்றார்.

அண்மைய கணக்கெடுப்பின் படி இலங்கையின் மொத்த சனத்தொகையில் 9.7 சதவீதமானவர்களே முஸ்லிம்களாவர். முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் ஒரேயொரு மாவட்டம் அம்பாரை ஆகும். பொதுவாக அம்பாரை மாவட்டத்தை முஸ்லிம் பெரும்பான்மைக்குரியதென்பதை இல்லாதொழிப்பதில் பௌத்த சிங்கள சக்திகள் பாரிய திட்டங்களை தீட்டி அதனை நடைமுறைப்படுத்தும் நடவடிக்கையினை நீண்ட காலமாக முன்னெடுத்து வருகின்றன. பல சந்தர்ப்பங்களில் புனித பூமி பிரகடனம் மற்றும் வேறு மாவட்டம் சிலதை அம்பாரையோடு இணைத்தல், காணி சுவீகரிப்பு போன்ற அணுகுமுறைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இவை யாவும் அம்பாரையை முஸ்லிம் பெரும்பான்மை மாவட்டம் என்ற நிலைப்பாட்டை இல்லாமலாக்கச் செய்வதற்கான செயற்பாடுகளாகும். (நூறுல் ஹக் : 20, 2011)

இத்தகைய செயற்பாட்டின் தொடர்ச்சியாகவே மாயக்கல்லி மலை விவகாரத்தையும் நோக்க வேண்டும். அம்பாரையில் முஸ்லிம் காங்கிரஸின் சார்பில் மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களும் ஐந்து மாகாண சபை உறுப்பினர்களும் உள்ளனர். இம்மாவட்டத்தில் முஸ்லிம்களுக்கு ஏற்படும் அநியாயங்களை தடுக்க வேண்டிய கடமை இவர்களுக்குரியதாகும். ஆனால் மாயக்கல்லியில் சிலை வைக்கப்பட்ட போது அதனை இரண்டு வாரங்களில் அகற்றுவோம் என்று கூறிய உறுதி மொழியை இவர்களாலும் ரவூப் ஹக்கீமாலும் காப்பாற்ற முடியவில்லை. அதனை அகற்றுவதற்கான நடவடிக்கையினையும் அவர்கள் எடுக்கவில்லை. (வீரகேசரி, 2017.04.30)

2015 தேர்தலில் முஸ்லிம்கள் பெரும்பான்மையினரின் வாக்குகளைப்பெற்ற முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம் மக்களின் உரிமையைப் பாதுகாப்பதிலும், மக்களுக்காக குரல் எழுப்புவதிலுமிருந்து தன் கடமையை தவற விட்டுள்ளது. முஸ்லிம்களின் காணி அபகரிப்பு தொடர்பில் இதற்குப் பின்னரும் முஸ்லிம் காங்கிரஸ் அமைதி காப்பதானது அதன் அரசியல் நிலைத்தன்மையில் பாரிய பின்னடைவை ஏற்படுத்தும். இனிமேலும் தங்கள் அரசியல் லாபங்களை கருத்தில் கொண்டவாறே முஸ்லிம் கட்சிகள் செயற்படுமானால் இதற்கான பெரும்விலையை அவர்கள் கொடுக்க நேரிடலாம்.

இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் பிரதானமான முஸ்லிம் கட்சித்தலைவர்களாகக் கொள்ளப்படும் தற்போது ஆட்சியிலுள்ள ரவூப் ஹக்கீம், றிசாத் பதியுதீன் போன்றோர் இது தொடர்பில் துரிதமான நடவடிக்கையினை மேற்கொள்ள முன்வர வேண்டும். முஸ்லிம் பிரதிநிதித்துவத்தை ஏற்றிருக்கும் 21 பாராளுமன்ற உறுப்பினர்களும் மக்களுக்கு ஆதரவான செயற்பாட்டை முன்னெடுக்க வேண்டும். அரசாங்கத்தையும் பெரும்பான்மையினரையும் திருப்திப்படுத்தும் வகையிலாக நடந்து கொள்ளும் இவர்களது செயற்பாடு மாயக்கல்லி பிரச்சினையிலும் தொடர்ந்து முஸ்லிம்கள் எதிர்நோக்கும் நெருக்கடிகளின் போதும் மௌனமாக இருப்பதிலிருந்து புலனாகின்றது.

ஆனால் இதற்கு மாற்றமான செயற்பாட்டுடைய தலைவர்களைக் கொண்ட முஸ்லிம் சமூகம் அவர்களைத் தெரிவு செய்வதில் விட்ட தவறினை உணர வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது. இனிமேலாவது அர்ப்பணிப்புடனும் சமூக சிரத்தையுடனும் மக்களுக்காக சிந்திக்கின்ற தலைமையொன்றினை உருவாக்குவது மற்றும் தெரிவு செய்வது தொடர்பில் முஸ்லிம் மக்கள் சிந்திக்க வேண்டிய கட்டாயம் எழுந்துள்ளது.

## தீர்வுகளும் பரிந்துரைகளும்

இறக்காமம் மாயக்கல்லி சிலை வைப்பு மற்றும் விகாரை அமைப்பதற்கான முயற்சிகளை அடுத்து அம்பாரை மாவட்டத்தின் பல பிரதேசங்களிலும் மக்கள் எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் பெரும்பான்மை இனத்தவர்கள் தங்களது மதம் மற்றும் வாழ்வியலை பரவலாக்கம் செய்யும் முயற்சியில் சிறுபான்மையினர்களுக்கு நெருக்கடிகளை உருவாக்குவது இது ஒன்றும் புதிதல்ல. முஸ்லிம்களுக்கென தனித்துவமான அரசியல் உருவாக்கம் அவசியமாக உணரப்பட்டதன் பின்னணியிலும் இத்தகைய செயற்பாடுகளின் தடம் இல்லாமலில்லை.

மாணிக்கமடு மாயக்கல்லி மலையில் சிலை வைக்கப்பட்டபோது இதன் பின்னணியில் எவ்வித உள்நோக்கமும் இல்லை என்றே இனவாதிகள் குறிப்பிட்டிருந்தனர். பின்னர் விகாரை அமைப்பதற்கான நடவடிக்கைகளில் முஸ்லிம்களுக்கு சொந்தமான காணியில் அத்துமீறி செயற்பட்டனர். இதன் பின்னணியிலும் சிங்களவர்களை குடியேற்றும் நோக்கம் ஏதும் இல்லை என்றே அவர்கள் கூறிவருகின்றனர். ஆனால் இவற்றுக்குப் பின்னால் அது தான் நடக்கப்போகின்றது என்பது உறுதி. இந்த விடயத்தில் அரசாங்கம் மௌனம் காப்பதானது இதன் பின்னணியில் அரசாங்கம் தான் செயற்படுகின்றதா? என்ற கேள்வியை மக்கள் மத்தியில் எழுப்பியுள்ளது.

இவற்றுக்கான தீர்வு என்ன? தொடர்ந்து கொண்டிருக்கும் சிறுபான்மையினருக்கான இன நெருக்கடி மற்றும் இனவாதத்தின் பின்னணியில் ஆட்சியை தக்கவைப்பதற்கான அல்லது ஆட்சியைக் கைப்பற்றுவதற்கான தந்திர செயற்திட்டம் காணப்படுகின்றதா? என்பன தொடர்பாக அவ்வப்போது சிலர் பேசுவதும் கைவிடுவதுமான சூழ்நிலையே நிலவுகின்றது. இல்லையென்றால் அடுத்த தேர்தல் வரையில் மக்களும் மௌனமாக பார்த்துக் கொண்டிருக்கப்போகிறார்களா? என எண்ணத்தோன்றுகின்றது.

இவற்றினையெல்லாம் அவதானிக்கின்ற போது எத்தகைய செயற்பாடுகள் முன்னெடுக்கத்தகுந்தவை என்பது தொடர்பில் பரிசீலிப்பது அவசியமானதாகப்படுகின்றது.

1. தெரிந்தோ தெரியாமலோ முஸ்லிம்கள் தமக்கான தனியான தலைமைத்துவ அரசியலை தேர்ந்தெடுத்தனர். ஆனால் இன்று முஸ்லிம் அரசியல் கட்சிகளிடையே காணப்படும் பிளவுகளும் பிரிவினையும் இனியும் தீர்ந்து விடப் போவதில்லை. வேறுபட்ட கொள்கைகளைக் கொண்ட அவர்கள் ஒன்றாகச் சேர்ந்து இவ்விடயத்தில் மக்களுக்காக குரல் கொடுப்பார்கள் அல்லது பதவிப் பகிஷ்கரிப்புச் செய்து போராடுவார்கள் என்றெல்லாம் எதிர்பார்ப்பது புத்திசாலித்தனமானதல்ல. தத்தமது கட்சி ரீதியிலேனும்சரி அவர்கள் நடவடிக்கை மேற்கொள்ளாதிருக்கும் நிலையில் அது சாத்தியமானதல்ல என்பது புலனாகிறது. முஸ்லிம் அரசியல் தலைவர்களின் பாராமுகத்தை எவ்வளவுதான் மக்கள் ஊடகங்கள் வாயிலாக சுட்டிக்காட்டினாலும் அது திருத்தியமைக்கப்படப் போவதில்லை என்பதே முடிவாகிறது. அப்படியான ஒரு சிலரின் செயற்பாடுகளும் அநீதிக்கு எதிரான துரித நடவடிக்கை அல்ல. முஸ்லிம்களுக்கு எதிராக எத்தனையோ வன்முறைச் சம்பவங்கள் பதிவு செய்யப்பட்ட போதிலும் அதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. முஸ்லிம் அரசியலின் மாற்று பற்றி மக்கள் சிந்திப்பதில்லை, முஸ்லிம்களுக்கான கட்சி ஒன்று இருந்தால் போதும் என்ற அவர்களின் எண்ணமே ஒரு கட்சியை காரணம் காட்டி தவறான தலைமைகளை மக்கள் பிரதிநிதிகளாக உருவாக்கிக் கொண்டிருக்கிறது. அதற்கான எடுத்துக்காட்டுகளே இத்தகைய நெருக்கடிகளாகும். தங்கள் உரிமைகளைப் பாதுகாப்பதில் பங்குகொள்ளாத கட்சிகளையும்,

மக்கள் பிரதிநிதிகளையும் கவனத்தில் கொண்டு இனிவரும் காலங்களில் களையகற்றும் நடவடிக்கையில் ஈடுபட வேண்டும். சிறந்த தலைமைத்துவத்தை உருவாக்குவதிலும் தெரிவு செய்வதிலும் கரிசனை கொள்ள வேண்டும்.

2. இனிமேலும் அரசியல் கட்சிகளை நம்பி ஒன்றும் ஆகப்போவதில்லை என்பது அறிந்ததே. இன்னும் இன்னும் அரசியல் தலைவர்களையும் அரசியல் கட்சிகளையும் சார்ந்து கட்சிக் கொள்கைகளையே தமது கொள்கைகளாக ஆக்கிக்கொண்டு செயலாற்றிக் கொண்டிருக்கும் போக்கிலிருந்து முஸ்லிம் இளைஞர்கள் விடுபட வேண்டும். கட்சிப் பதாகைகளுக்குப் பின்னால் நின்று கொண்டுதான் குரல் கொடுக்க வேண்டும் என்ற மனநிலையிலிருந்து மாற்றமடைய வேண்டும்.
3. மட்டுமன்றி இத்தகைய விவகாரங்களை அரசியல் தலைமைகளிடமும், தரப்புக்களிடமும் பொறுப்புச்சாட்டி விட்டு எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாமல் இருக்கும் நிலையும் காணப்படுகின்றது. இது இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் சிவில் சமூக எழுச்சி விடயத்தில் பாராமுகமானவர்களாக செயற்படும் தன்மையைத் தோற்றுவித்துள்ளது. நல்லாட்சியின் பங்குதாரராக சிவில் சமூகம் செயற்படல் அவசியமானது. இத்தகைய நெருக்கடிகள் தொடர்பில் அரசு பாராமுகமாக இருக்கும் பட்சத்தில் சிவில் சமூகம் அரசுக்கு நெருக்கடி கொடுக்கும் பாத்திரத்தை வகிக்க வேண்டியதாகின்றது. சிவில் சமூகம் உயிர்த்துடிப்போடு இயங்குகின்ற போதுதான் உண்மையான நல்லாட்சி நிலவ முடியும். ஜனநாயகம் பாதுகாக்கப்பட முடியும். இல்லையென்றால் ஒற்றைத்தன்மையான நலன் பேணும் நடவடிக்கையே காணப்படும். நாட்டின் சகல மக்கள், சமூகம், இனங்களின் நலன் பேணலில் பாராமுகமே மிஞ்சும். அத்தகைய சிவில் அமைப்பை தோற்றுவிப்பதில் முஸ்லிம்கள் அசிரத்தையாக இருப்பதானது தங்களுக்குத் தாங்களே துரோகமிழைத்துக் கொண்டது போல் ஆகிவிட்டது.
4. அங்கீகாரத்தை மாத்திரம் எதிர்பார்க்கும் முஸ்லிம்கள் தங்களுக்கான ஆராய்ச்சி மற்றும் ஆவணப்படுத்தல் போன்ற விடயங்களில் பலவீனமானவர்களாகவே இருந்து வருகின்றனர். மாயக்கல்லி சிலை வைப்பில் பேரினவாதிகள் தொல்பொருள் திணைக்களத்திற்குரிய மலையில் சிலை வைப்பதற்கு எங்களுக்கு அதிகாரம் உள்ளது என்ற ரீதியில் கருத்து வெளியிட்டிருந்தனர். இது தொடர்பில் ஆராய்ச்சி செய்து கருத்தளிக்கவோ, தங்களுக்கான ஆவணப்படுத்தல்களை உருவாக்கவோ தயாரான ஒருவர் கூட முஸ்லிம்களில் இல்லை. இது நீண்ட காலமாகத் தொடரும் வெற்றிடமாகும். குறுகிய கால தீர்வை முன்வைக்கவே அனைவரும் விரும்புகின்றனர். இது தொடர்பில் கவனம் கொள்ளவோ, தன் சமூகத்திற்காக சிந்தித்து முன்னிலையில் நின்று செயற்படவோ யாரும் தயாராக இல்லை. குறிப்பிட்ட சிலரை குற்றம் சாட்டி விட்டு அல்லது பொறுப்புச் சாட்டி விட்டு ஒதுங்கி நின்று வேடிக்கை பார்க்கும் நிலையே இன்றைய முஸ்லிம் இளைஞர்களிடமும் ஆர்வலர்களிடமும் காணப்படுகின்றது. சிங்களவர்கள் தோன்றுவதற்கு முன்னரே பல்வேறுபட்ட பண்பாட்டுக் கோலங்களைக் கொண்ட நாடு இது. ஆனால் தொல்லியலில் ஈடுபடுவது சமூகப்பொறுப்பு என்பதையும் தாண்டி பிழைப்புக்கு உதவாததாகவே பார்க்கப்படுகிறது. அவ்வாறே ஆக்கப்பட்டுமிருக்கிறது.
5. தேசிய ஐக்கியத்தைக் கட்டியெழுப்புவதில் தங்களது பங்கு என்ன என்பதை ஊடகவியலாளர்களும் ஊடகங்களும் உணர வேண்டியது அவசியமாகும். மாயக்கல்லி விவகாரம் தொடர்பில் வீரகேசரி, விடிவெள்ளி போன்ற பத்திரிகைகளைத்தவிர வேறு எந்தப்பத்திரிகைகளும் பெரிதாக கண்டுகொள்ளவில்லை. அதிலும் சில முஸ்லிம் ஊடகவியலாளர்களே அதற்காக தங்களது குரலைப் பதிவு செய்திருந்தனர். பெரும்பான்மையான சிங்கள மக்களுக்கு இங்கு என்ன நடக்கிறது என்பது தெரியாது.

இங்குள்ள மக்களின் நியாயமான வேண்டுகோள் என்ன என்பது பற்றியும் அவர்கள் அறிந்திருக்க வாய்ப்பில்லை. மாறாக திரிபடைந்த கருத்துக்களும் செய்திகளும் பகிரப்படலாம். அதனையே அவர்கள் உண்மை எனவும் நம்பியிருக்கலாம். இவற்றையெல்லாம் மாற்ற வேண்டிய பொறுப்பு ஊடகங்களுக்கு உண்டு. மாறாக அவற்றை தவறான முறையில் சுயலாபங்களுக்காக சித்தரிப்பதிலிருந்தும் விலகியிருத்தல் நல்லது. இன,மத,மொழி வேறுபாடுகள் கடந்த மக்கள் நலன் கருத்தில் கொள்ளப்படுவதிலும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதிலும் மக்களை சிந்திக்கச் செய்யும் பொறுப்பு ஊடகங்களுக்கு உண்டு. இது தொடர்பில் நம்பிக்கையளிக்கும் விதத்தில் சிங்களப் பத்திரிகையான 'ராவய' சிங்கள பேரினவாதத்திற்கு எதிரான ரீதியில் ஆசிரியர் தலையங்கம் ஒன்றினை வெளியிட்டது. இதனை நடுநிலைப் போக்குடன் அமைந்த ஊடகதர்மமாக கொள்ளலாம்.

6. மத, இன ரீதியில் பிரச்சினைகளை அணுகும் போக்கு மாற்றப்பட வேண்டும். முஸ்லிம்களுக்கு பிரச்சினை ஏற்பட்டால் முஸ்லிம்கள் மாத்திரம் குரல் கொடுப்பதும், தமிழர்களுக்கு பிரச்சினை ஏற்பட்டால் தமிழர்கள் மாத்திரம் அதற்காக போராடுவதும், கிறிஸ்த்தவர்களுக்கு பிரச்சினை எனின் அவர்கள் மட்டும் அதில் கரிசனை கொள்வதும், சிங்களவர்களுக்கு பிரச்சினை எனில் சிங்களவர்கள் மாத்திரம் அதில் ஈடுபடும் போக்கிலிருந்தும் மாற்றம் ஏற்பட வேண்டும். பேதமற்று அநியாயங்களுக்கெதிராக பேசவும், குரல் கொடுக்கவுமான சூழல் நிலவுவது ஒரு பன்மைக் கலாசார நாட்டில் ஆரோக்கியமான சூழலைத் தோற்றுவிக்கும்.
7. இலங்கையில் நடந்து முடிந்த முப்பது வருட கால யுத்தம் விதைத்த இழப்புக்களிலிருந்து பொதுமக்களும் சரி நாடும் சரி இன்னும் முழுதாக மீண்டு வராத நிலையில் மீண்டுமொரு யுத்தத்தினை தோற்றுவிப்பதற்கான முன்னெடுப்பாக எந்த செயற்பாடுகளும் அமைந்து விடக்கூடாது என்பதில் தீர்க்கமான மனநிலையுடையவர்களாக இருத்தல் அவசியமாகும். நாட்டின் அசாதாரண நிலையைக் கருத்தில் கொண்டு இளைஞர்களை தூண்டிவிடும் அல்லது இளைஞர்கள் தீர்வைக் கையிலெடுக்கும் நிலை புத்திசாலித்தனமானதல்ல. எனவே இது மிக அவதானமாக கையாளவும் செயற்படவும் வேண்டியதான நிலைப்பாடாகும் என்பது புரியவைக்கப்படல் வேண்டும்.

**முடிவுரை**

பத்தொன்பதாவது நூற்றாண்டு வரையில் மனித வரலாற்றில் அதிக செல்வாக்கினையுடைய மனிதராக புத்தரே காணப்பட்டார். 1500 வருடங்களுக்கும் மேலாக அவரது போதனை இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் தழைத்தோங்கியது. கி.பி.13ஆம் நூற்றாண்டில் அதன் ஆதிக்கம் அது தோன்றிய நாட்டில் சிதைவுற்று, திபெத், மத்திய ஆசியா, சீனா, கொரியா, ஜப்பான், இலங்கை எனப்பரவியிருந்தது.

நல்லெண்ணம், நற்செய்கை, நல்வாழ்வு, நன்முயற்சி, நல்வாய்மை, நல்ல தியானம், நல் நம்பிக்கை, நற்சாட்சி என எண்வகை வழிகளையும் போதித்த புத்தர் இந்த உலகில் தோன்றிய மகாஞானிகளில் தனித்துவ இடத்தினைப் பிடித்தவராவார். பிற உயிர்களுக்கு துன்பம் விளைவிப்பதையும், பிறர் பொருட்களைக் கவர்வதைத் தவிர்க்குமாறும் போதித்த புத்தரின் பெயரால் இலங்கையில் சிறுபான்மையினத்தவர்கள் மீது மேற்கொள்ளப்படும் இனவாதச் செயல்கள் தனிப்பட்ட குரோதம், மற்றும் அரசியல் சுயலாபங்களைக் கருத்தில் கொண்டதாகும் என்பது புலனாகின்றது.

இலங்கை பெரும்பான்மை இனத்தவர்கள் தங்களின் மதத்தையும் அவர்களது வாழ்வியலையும் பரவலாக்கம் செய்வதில் அதிகாரத்தைப் பிரயோகிப்பது புதிதானதல்ல. இதிலிருந்து தங்கள் இருப்பை தக்கவைத்துக் கொள்ளும் வகையில் சிந்தித்து செயல்பட வேண்டிய தேவை முஸ்லிம்களுக்கு

உண்டு. அரசியல், சமூக, தொல்லியல், பொருளாதார, இதழியல் ரீதியில் மிகமுக்கியமான நடைமுறைகளை செயற்படுத்துவதிலும், பொதுநல ரீதியான செயற்பாடுகளை முன்னெடுப்பதனூடாகவும் இத்தகைய நெருக்கடிகளிலிருந்து விடுபடல் அவசியம் என்பதை முஸ்லிம்கள் உணர வேண்டும். இதற்கான முயற்சியில் சமூக ஆர்வலர்களும், புத்திஜீவிகளும், ஊடகவியலாளர்களும், இளைஞர்களும் சிந்திப்பதும் செயற்படுவதும் முக்கியமானதாகும்.

**உசாத்துணைகள்**

**நூல்கள்**

1. மணி,சி., (2005), 'புத்தர் - மிகச் சுருக்கமான அறிமுகம்', அடையாளம் பதிப்பகம், சென்னை
2. சுந்தர்,கோ., (2007), 'தொல்லியல் - மிகச் சுருக்கமான அறிமுகம்', அடையாளம் பதிப்பகம், சென்னை
3. இத்ரீஸ்,ஏ.பி.எம்., (2012), 'குடிமைச் சமூகத்தை வலுவூட்டல்', காகம் பதிப்பகம், வாழைச்சேனை
4. நூறுல் ஹக், எம்.எம்.எம்., (2011), 'அரசியல் சிந்தனைத்துவமும் சமூக இருப்பும்', மருதம் கலை இலக்கிய வட்டம், சாய்ந்தமருது
5. சர்ஜுன்,ஏ., றிபான், ஏ.எம்., (2011), 'சமகால அரசியல் எண்ணக்கருக்கள்', சாந்தி இல்ல வெளியீட்டகம்

**ஆய்வுக் கட்டுரைகள்**

1. ஆலிப், எஸ்.எம்., (2015), 'களம் - இதழ் 04', கலை கலாசார பீடம், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

**பத்திரிகைகள்**

1. நிப்ராஸ்,ஏ.எல்., (2017.04.30), 'மாயக்கல்லி மலையில் மறைந்திருக்கும் மர்மம்', வீரகேசரி
2. சஹாப்தீன், (2017.04.30), 'மாயக்கல்லி மலை விவகாரம்: அரசின் மௌனம் ஏன்?', வீரகேசரி
3. ஜயதிலக டி சில்வா, (2017.03.17), 'தேசிய ஐக்கியத்தைக் கட்டியெழுப்புவதில் சிங்கள, தமிழ், முஸ்லிம் ஊடகங்களின் பொறுப்பு என்ன?', விடிவெள்ளி
4. சிராஜ் மஸ்ஹுர், (2017.02.17), 'முஸ்லிம் அரசியலில் எப்படியான மாற்றம் தேவை?', விடிவெள்ளி
5. சிராஜ் மஸ்ஹுர், (2017.05.26), 'நெருக்கடி மிக்க நாட்கள்: சதிவலைகளை அறிவு பூர்வமாக கடந்து செல்வது எப்படி?' , வீரகேசரி

**இணையத்தளம்**

1. நிலாந்தன், (2014), 'முஸ்லிம்கள் மீதான வன்முறைகள்: உள்ளோட்டம் என்ன?' Retrieved from www.tamilkingdom.com/2014/06/blog-post_6674.html

2. ஷிப்லி, எப்.எச்.ஏ.,(2014), ‘யுத்தத்திற்கு பின் கட்டவிழ்த்து விடப்படும் வன்முறைகளும், சிறுபான்மை இனங்கள் ஒற்றுமைப்பட வேண்டியதன் அவசியமும்’ Retrieved from www.jaffnamuslim.com/2014/06/blog-post_3358.html
3. பைஸ், (2016), ‘மீண்டும் பள்ளிவாசல் தாக்குதல்கள்: நல்லாட்சி அரசாங்கமும் பராமுகமா?’ Retrieved from www.virakesari.lk/article/13529
4. கிருஷ்ணன் ஜெயசங்கர், (2011), ‘நல்லாட்சியின் தற்கால தேவையும் முக்கியத்துவமும்’ Retrieved from www.artsveli.blogspot.com/2011/08/blog-spot_6609.html
5. அஹமட் மன்சில், (2017), ‘இலங்கையில் முஸ்லிம் அரசியல் கட்சிகளின் தோற்றம்’, Retrieved from www.arugamnews.com/2017/02/blog-spot_974.html